93

Regd. No. M. 15[illegible]0

BALAV[INODINI]

OR

THE CHIL[D]REN'S FRIEND

An Illustrated Ta[mil] Monthly for Children

TO INSTR[UCT] AND CHERISH
THE YOUNG HEAR[TS] WITH SWEET INSPIRING
AND
EDUCA[TIVE] NOVELTIES

18 JAN 1924

Vol. V] [A]UGUST 1923 [No. 8

EDITED BY
[V]ARAKAVI TIRU
A. SU[B]RAMANYA BHARATI

PUBLISHED BY
SRI B[A]LASUBRAMANYAM & Co.,
[Ro]yapettah P. O., MADRAS.

3L
LL9C00211,M1y
N23.5.8
186463

[Subscrip]tion Inland Rs. 1—8
Foreign Rs. 2—0

All Rights reserved by the Publishers.

Vol. V. தொகுதி 5.	1923௵ ஆகஸ்ட்மீ	No. 8. பகுதி 8.

CONTENTS—பொருளடக்கம்

	பக்கம்.
தெய்வ வணக்கம்	225
ஹிதோபதேசம்	226
இராஜ விசுவாசம்	227
ஹிதோபதேசம் (Bit)	234
ஹாஸ்யம்	235
விளம்பரம், கோபம்—பாபம் சண்டாளம்	236
பிரார்த்தனை (Bit)	239
ஹாஸ்யம்	240
பழமொழிகள் (Bit)	243
ஸ்ரீமான் ரங்கவடிவேல் முதலியார் அவர்கள் பி. ஏ., பி. எல்., ...	244
மக்கட் பிறவியினாலே பெறத்தக்கவை (Bit)	253
பணத்தாசையின் பயன்	254

சித்திரப் படங்கள்.

(1) ஸ்ரீமான் ரங்கவடிவேல் முதலியார் அவர்கள்

(2) ஷை ஸ்திரீ வேஷம்

குறிப்பு.—எமது கையொப்பமிட்ட எமது கம்பெனி ரசீது பெற்றுக்கொண்டு ஏஜெண்டுகளிடம் சந்த தொகையைச் செலுத்தக் கோருகிறோம். எமது ரசீது இல்லாமல் ஆனால் ஒப்புக்கொள்ளப் பட மாட்டாது.

உ

செந்திலாண்டவன் து

பாலவிே

அல

குழந்தைகளி

ஒரு மாதாந்த

தொகுதி 5	1923ஹ

தெய்வ

ஆதார பாதாளம் பெயர
தண்டமுகடது பெய்

ஆடரவ முடிபெயர எ
கவுட்கிரிசரம் பெய

வேதான தாளங்களுக்
மிக்கப் பிரியப் பட

விழிபவுரி கௌரிகண்
விஸ்தார நிர்த்த மயி

மாதாது பங்கியெனும்
மகிதரிகிராத குலி

மறைமுனி குமாரி ச
வள்ளிமணி நூபுர

பாதாரவிந்து சேகர
பலகிரி யமர்ந்த பெ

படைநிருதர் கடகமு
பசுந்தோகை வா

அ

...நாபதேசம்.

...இருள் ஓடிப்போய் விடுகிறது.
...லம் பேர்ய்விடுகிறது. அது
...கள் தேடியதைச் செலவழித்
...டாலும் காலம் வருகிறபோது
...டாக்குகிறது. அப்படியிருக்
...த்தைத்தேட ஏன் இவ்வளவு
...ஒத்திருந்தால் அந்தத் திர
... ஆகையினால் அது கொஞ்
...கிறதுமில்லை. ஏககாலத்தில்
...லை. சரியாகக் காப்பாற்றப்
... நூறு துண்டுகளாகச் சித
...மது குணங்களும் செய்கை
...நக்கின்றன.

(பாரதம்-வனபர்வம்)

...ம் நாடோறும் தவறாமல்
...ன்றன. அவை அப்படி
... கூடுமா? அவற்றால் நாம்
...ம்டோ? இல்லையல்லவா?
...து நாம் ஏதேனும் பிரதி
...மில்லை. அவைநம்முடைய
...யங்குகின்றன. மேகமும்
...து. காற்று வீசுகிறது.
... பார்ப்போமானால் நாம்
...கிறோம் என்று நிச்சய
...பரோபகாரத்தால் வாழ்ந்
...செய்யாமல் வாழ நினைப்

...ள் உடம்பைத் தரும்
...ர்க்க மாட்டார்கள். தாம
...நரிடும் காலத்தில், சந்
...ற்றுவர்.

இராஜ விசுவாசம்

இராஜபுத்திரர் அரசுபுரிந்து வந்தகாலத்தில் இராஜபுதனத்தைச் சார்ந்த மீவாரில் சங்காம்ஸிங் என்று ஓர் அரசனிருந்தான். அவனுக்குப் பெருங்கீர்த்தி யிருந்தது. அவன் மதியூக முடையவனாக விளங்கினான்; நல்லவனென்று பேரெடுத்தான்; குடிகளிடத்தில் மாறாத அன்புடையவனாயிருந்தான்; ஆனால் யாரையும் எளிதிலே நம்பும் இயல்புடையவன். அப்படி எவரையும் நம்பிவிடுவது ஒரு சமயமில்லாவிட்டால் ஒரு சமயம் பெருங்கேட்டைத் தருமென்பதைச் சில சமயம் அவனுடைய மந்திரிகள் அவனுக்குக் கூறுவார்கள். கூறினாலும் அவனுடைய மனதில் அது தவறு என்பது படுவதில்லை. இந்தப் பெருங்குறை அவனிடமிருந்தது.

இதனாலே அவ்வேந்தன் தன்னிடம் வேலைக்காரனாயிருந்த பனாபீர் என்பவனிடம் முழுநம்பிக்கைகொண்டு அவன் சொல்லுகிறபடி நடந்து வந்தான்; அப்படியிருந்தவன் கொஞ்சநாளில் அவனைப் பிரதான மந்திரியாகவும் வைத்துக்கொண்டான். அப்பொழுது எல்லோரும் அரசனுடைய மதியீனத்தை எடுத்துப் பேசி வருந்தினர். வேலைக்காரனா யிருந்தாலென்ன? பெரிய அறிவாளியாயிருந்தால், அவனை விரும்புவதும் அவனை

உயர்த்துவதும் தகும். இவனோ எழுத்து வாசனை யறியாத இழிஞன். இவனிடம் தான்கொண்ட ஒரு விசுவாசத்தினாலேயே அரசன் இவனை இவ்வாறு உயர்ந்த பதவியில் வைத்துக்கொண்டான். இதனால் நன்மை விளையுமா தீமைவிளையுமா என்பதை அவன் கருதவில்லை. 'நாயைக் கொணர்ந்து நடுவுள்ளேவைத்தால் அது வாலைக் குழைத்துக்கொண்டு மலந்தின்னப் போகுமாம்' என்று பழமொழி கூறுவதுண்டு. அதுபோல் இந்த அற்ப வேலைக்காரன் தன்னுடைய கீழ்க்குணத்தைக் காட்டுவானே தவிர தன்பதவிக்கேற்ற கௌரவமான குணத்தை வகிப்பானென்று மதியூகிகள் எண்ணமாட்டார்கள்.

இப்படியிருக்கையில் அரசனுக்கு ஒரு பிள்ளை பிறந்தது. அந்தப் பிள்ளைக்கு உதயசிங் என்று பெயரிட்டு அரசன் அவனை மிகச்செல்வமாக வளர்த்துவந்தான். உதயசிங் ஒரு குறைவு மில்லாமல் ஆறுவயது வரையில் வளர்ந்தான். ஆறுவது வயதில் அவனுடைய தந்தையாகிய சங்காம்ஸிங் மரணமானான். மரணமடையு முன் அவன் பனுபீரையே தன்மகனுக்குப் போஷகனாயிருந்து அரசைப் பரிபாலிக்கும்படி நியமித்தான்; உதயசிங்கின் தாயார் அவன் பிறந்த சில மாதங்களுக்கெல்லாம் இறந்துவிட்டபடியால் அவனை அன்பாய்ப் பாதுகாத்துவர ஓர் இராஜபுத்திரஸ்திரீயை நியமித்தான். அவள் பன்னா என்னும் பெயர்பூண்டிருந்தாள்.

பன்னா பரம சாந்தமுடையவள்; மகா புத்திசாலி; சமயோசிதமாக நடந்துகொள்ளும் சாமர்த்தியசாலி. அதிர்ஷ்டவசமாய்க் குழந்தை அவளிடம் போய்ச் சேர்ந்தது. அவளுடைய குணங்களையெல்லோரும் புகழ்வார்

கள். தன்னை எல்லோரும் புகழ்ந்து பேசும்படியே அவள் நடந்து வருவாள்.

பனாபீர் அரசனாகவே அவன் தலைகால் தெரியாமல் காரிய நிர்வாகஞ் செய்யத் தலைப்பட்டான்;

'செல்வம்வந் துற்ற காலைத் தெய்வமுஞ் சிறிது பேணார்
சொல்வன வறிந்து சொல்லார் சுற்றமுந் துணையு நோக்கார்
வெல்வதே நினைவ தல்லால் வெம்பகை வலிதென் றெண்ணார்
வல்வினை விளைவு மோரார் மண்ணின்மேல் வாழு மாந்தர்'

என்று பெரியோர் கூறியருளியபடி மாறினான். பேரறிஞர்களும் உலக சம்பத்திலே மயங்கித் தகாத காரியங்களைச் செய்வதைக் காண்கிறோம். அப்படியிருக்க இவன் எப்படி அதிலிருந்து தப்புவான்.

இப்படிக்குணங்கள் மாறவே பனாபீர் உதயசிங்கை எப்படியாவது ஒழித்துவிட்டு அரசைத் தனக்கும் தன் வம்சத்துக்கும் சொந்தமாக்கிக்கொள்ள வேண்டுமென்று தீர்மானித்தான். இந்தத் தீர்மானம் வர வர உறுதி பெற்றது. அதன்மேல் அவன் தன் தீர்மானித்திற்கேற்றயுக்திகளைத் தேடலானான். முதலில் பிறரைக்கொண்டு தன் வேலையை முடித்துக் கொள்ளலாமா என்று நினைத்தான். நினைத்தானானாலும் அவன் பிறரிடத்தில் சிறிதும் நம்பிக்கை வைப்பதில்லையாகையினால் அப்படிச்செய்ய அவன் மனமிடந்தரவில்லை. ஆகவே அவன் தானே தன் எண்ணத்தை நிறைவேற்றத்துணிந்தான். அந்தோ!— துராசையின் போக்கைக் கவனியுங்கள்.

இவன் இவ்வாறு எண்ணங்கொண்டிருப்பதை ஒருவருமறியவில்லை. இராஜகிருகத்து அம்பட்டன் எப்படியோ அதைத் தெரிந்துகொண்டான்; அவன் இராஜ விசு-

186463

வாசமேவிட்டு உதயசிங்கைக் காப்பாற்ற வேண்டு மென்று தீர்மானித்தான். ஆகையினால் ஒருநாள் முன் சாமத்தில் அவன் இராஜகிரகத்தினுள்ளே பிரவேசித்துப் பன்னு இருக்கும் அறையைநோக்கிப் போனான். பன்னு அப்பொழுது உதயசிங்கைத்தூங்க வைத்து விட்டுத்தான் அங்கோரிடத்தில் ஏதோ சிந்தித்தவண்ணம் உட்கார்ந் திருந்தாள். அம்பட்டன் தன் அறையைநோக்கி வரு வதைக்கண்ட அவள் "இவனேன் இந்நேரத்தில் இங்கே வருகிறான்? காரணம்யாதாயிருக்கும்?" எனக்கருதி அவன் அருகே வந்ததும் "வா, அப்பா, இந்நேரத்தில் இங்கே வரக் காரணமென்ன ?" என்று கேட்டாள்.

அம்பட்டன்:—ஒரு பயங்கரமான சமாசாரம்!

பன்னு:—என்ன அது ? சும்மாசொல்.

அம்பட்டன்:—அதைச் சொல்லவும் என்மனம் நடுங் குகிறது.

பன்னு:—நிதானித்துச் சொல்

ஒரு பரிசு

" அக்காடு வெட்டிப் பருத்தி விதைக்கிறேன் என் றால் அப்பா எனக்கொரு துப்பட்டி என்கிறான் பிள்ளை'

இந்தப் பழமொழியைப் பொருந்தவைத்து ஒரு சிறு கதை பாலவிநோதினிக்கு எழுதி அனுப்பும் பிள்ளை களுடைய கதைகளில் எது சிறந்ததோ அதற்குரிய பிள்ளைக்குப் பாலவிநோதினியின் நான்காவதாண்டு புத்த கம் (வெகு அழகாய்த் தங்கஇலிட்டு பைண்டு செய்தது) பரிசளிக்கப்படும்.

பத்திராசிரியர்.

அம்பட்டன்:—"அம்மா, இராஜகுமாரனைக் கொல்ல இங்கே பனபீர் நடுநிசியிலே வருவான். ஜாக்கிரதை என்றான்.

பன்னு:—அவனிடத்தில் நான் சந்தேகித்ததுண்டு அப்படியே நீயும் சொல்லுகிறாய். இந்தப்பாவிக்கு இந்தத் துர்ப்புத்தியேன் வந்தது? கெட்டழிவதற்குத் தான். என்கண்மணியாகிய உதயசிங்கை நான் விட்டுவிடுவேனா?" என்று கூறிச் சற்று ஆலோசித்து, நான் ஒன்று கூறு கிறேன். அப்படி நீ செய்வாயானால் நாம் இராஜகுமாரனைக் காப்பாற்றி விடலாம். இராஜகுமாரன் காப்பாற்றப்படு வானானால் நாம் எவ்வளவோ பெருமையை அடையலாம் —என்றாள்.

அம்பட்டன் :—நீ என்னை என்ன செய்யச்சொல்லு கிறாய் ? சொல்லு பார்ப்போம்.

பன்னு — நான்பெரிய கூடையொன்றில் உதயசிங் கை எடுத்துவைத்து அவன்மீது குப்பைகளைப் போட்டு மூடித்தருகிறேன். நீ கூடையோடு அவனைத்தூக்கிக் கொண்டு மெதுவாய் வெளியேபோய்க் குழந்தையை எங்கேயாவது பத்திரப்படுத்திவிடு. பிறகு நான் பார்த் துக்கொள்கிறேன்.

அம்பட்டன் :—அம்மணி, இது எப்படி முடியும்? காவலாளிகளுக்குத் தப்பிச் செல்லவேண்டுமே !

பன்னு:—பயப்படாதே! மெதுவாய்ப் போய்விடு. இப்படிப்பட்ட சமயங்களிலெல்லாம் தைரியத்தை இழக் கப்படாது. போ—சீக்கிரம்-என்று சொல்லி, வெகு பா பரப்பாயோடி ஒரு பெருங்கூடையை எடுத்து வந்து உதயசிங்கை அதிலே மெதுவாய்த் தூக்கிவைத்து

அவன் மேலே குப்பைகளைப்போட்டு மூடி அம்பட்டன் தலையில் தூக்கிவைத்தாள்.

அம்பட்டன் கூடை தலைக்கேறியதும் தன்னை மறந்தவனாய் மெதுவாய் வெளியே சென்று குழந்தையை ஓரிடத்திலே பத்திரப் படுத்திவிட்டான். அவன் சென்றபின் பன்னா, "பனபீர் தன் எண்ணத்தை முடிக்க இங்கே வருவான். குழந்தை உதயசிங்கைத் தேடுவான். இல்லாவிடில் என்னைக் கேட்பான். கேட்டால் நான் என்ன பதிற் சொல்வது?—பிறகு அதில் சங்கடமேற்படும். ஆகையினால் இதற்கோர் உபாயந்தேட வேண்டும்." என்றெண்ணிச் சற்று ஆலோசித்தாள். அவள் மனத்துக்கு ஓர் யுக்தி புலப்பட்டது. உடனே சந்தோஷங்கொண்டாள்.

அவளுக்கொரு பிள்ளை ஐந்து வயதிலிருந்தான். அந்தப் பிள்ளையை உதயசிங் படுத்திருந்த இடத்தில் படுக்க வைத்துவிட்டுத் தானொரு மூலையிலே போய் ஒளிந்துகொண்டு பனபீர் என்னும் பாபி வருவதைப் பார்த்துக்கொண்டு நின்றாள். பன்னாவின் மனதைக் கவனித்தீர்களா? தன் பிள்ளையை உயிரோடு பிறருக்காக இவ்வாறு இழக்கத்துணியும் தாயுமுண்டோ உலகத்தில்?—இவளுடைய இராஜ பக்தியே இவளை இவ்வாறு செய்யத் தூண்டியது; துணிவைத் தந்தது!

இப்படியிருக்கையில் நடு நிசியில் பனபீர் உருவிய கத்தியுடன் வந்தான். அவன் வருவதைப்பார்த்த பன்னா, "ஆ! ஆ! கொலைபாதகா! படுபாவி! இராஜத்துரோகி! உன்னைத் தெய்வம் சும்மா விட்டுவிடுமா? எந்த நரகம் நீ அடையப்போகிறாயோ?" என்று மெதுவாய்க் கூறிக் கொண்டாள். அவள் தேகம் நடுங்கியது! உள்ளம்

பதைத்தது! பனுபீர் கிட்ட நெருங்கிவிட்டான். அப்பொழுது பன்னு மூர்ச்சையாய் விழுந்து விட்டாள். அந்தக்கணமே கொலைபாதகன் குழந்தையின் மார்பிலே கத்தியைப் பாய்ச்சினுன். குழந்தை வீறிட்டலறி இறந்தது. அந்தக் கூச்சல் அரண்மனை முழுதும் கேட்டது. பாதகனைச் சிசுஹத்தி தொடர்ந்தது. அவன் அந்தத்துணையுடன் அக்கணமே மறைந்தான். பிறகு அவ்விடத்தில் பெருங் கூட்டங்கூடி விட்டது. எல்லோரும், பன்னு மூர்ச்சித்துக்கிடப்பதைக்கண்டு இவளுக்குத்தான் ஏதோ நேர்ந்திருக்கிறதென நினைத்து அவள் முகத்தில் குளிர்ந்த நீரைத் தெளித்து எழுப்பினுர்கள். அவள் எழுந்ததும் பித்தங்கொண்டவள்போல் விழித்தாள்! குழந்தை சவமாயிருப்பதையும் அதன் மீது இரத்தம் பெருகியிருப்பதையும் அரண்மனை ஜனங்கள் இப்பொழுதுதான் பார்த்தார்கள்; உதயசிங்கே இறந்து விட்டானென்று தீர்மானித்தார்கள்.

அப்பால் கால்மணி நேரத்திற்கெல்லாம் பன்னு தன் நினைவை யடைந்தாள். அவள் பனுபீர் வந்து குழந்தையைக்கொன்றுன் என்று உண்மையைச் சொன்னல் அவனுல் இடையூறு நேருமென்றஞ்சி யாரோ கரிய நிறமுடைய மனிதன் திடீரென்று பிரவேசித்துக் குழந்தையைக் கொன்றுவிட்டதாகக்கூறி நடந்ததை மறைத்தாள்; பெருந்துக்கப்பட்டாள். இந்தச் செய்தி ஊர் முழுவதும் பரவிவிட்டது.

இப்படியிருக்கையில் பன்னு அம்பட்டனைத் தேடிக்கொண்டு வேகமாய்ச் சென்று அவனைக் கண்டு உதயசிங்கைக் கண்டுபிடித்து அவனை வெகுஜாக்கிரதையாய்க்

காப்பாற்றி வந்தாள். உதயசிங்குக்குத் தக்கவயது வந்ததும் அவனைவெளியே செல்லவிட்டாள். அவனை எல்லோரும் இராஜகுமாரனெனக் கண்டு கொண்டார்கள். உடனே அவன் பக்கம் பெருந்திரளான ஜனங்கள் சேர்ந்து கொண்டார்கள்; பனுபீரை எல்லோரும் எதிர்த்தார்கள். பெருஞ் சண்டையுண்டாயிற்று. சண்டையில் பனுபீரை யமலோகத்திற்கு அனுப்பிவிட்டார்கள். பிறகு உதயசிங் சிங்காதனமேறினான். பன்னுவின் இராஜவிசுவாசத்தை உலகமெல்லாம் புகழ்ந்தது.

ஹிதோபதேசம்.

1. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்; கதவுள்ள போதே சாத்திக்கொள் என்பதுபோல நீ உயிருடனிருக்கும்போதே, நல்ல செய்கைகளைச் செய்து புண்ணியம் பெற்று ஈசன் திருவருளுக்குப் பாத்திரவானாக முயலு. இதுதான் எந்தப் பெரியோரும் எந்த மதமும் எந்த நல்ல நூலும் உபதேசிக்கும் உபதேசமாகும்.

கீர்த்திமனி தர்க்குநற் பூடணம் இருங்கல்வி
　கேள்வி யிளையோர் பூடணம்
கிடைப்பருங் குலமகட்குக் கணவனைப் பேணல்
　கேடிலா தொளிர்பூடணம்
பார்த்திவர்க் குரியசெங் கோல்பூட ணங்கோயில்
　பரவுமூர்க்குப் பூடணம்
பயில்சேட்டை யின்உமையதி ராகபூ டணமாட்சி
　பன்னு முதியோர் பூடணம்
சேர்த்திடுங் கிளைதாங்கல செல்வர்பூ டணம் வாய்மை
　தேர்ந்தவிற் பனர்பூடணம்
சீரான நிலநீர் வளந்தேச பூடணம்
　திருமா நகர்ப் பூடணம்
பூர்த்தியா நின்னடிக் குயர்பத்தியே தக்க
　பூடணமெனச் சொல்வர்காண்
புனவள்ளி தெய்வயா னைக்குமண வாளனே
　போரிவடி வேன்முருகனே.

ஹாஸ்யம்

முப்பது வருஷத்திற்குமுன் ஒரு முனிஸிபலாபீஸ் உயர்ந்த உத்தியோகஸ்த னொருவன் ரூபாஐந்நூறுதிருடி விட்டான். அவன் அந்த ஆபீஸ்மானேஜரின் முன் விசாரணைக்குக் கொண்டுவரப்பட்டான். மானேஜர் விசாரணையை நாலைந்து தவணையில் பிரமாதமாக நடத்தினார். உயர்ந்த உத்தியோகஸ்தனுக்குப் பெருந்தண்டனை கிடைக்குமென்று எல்லோரும் எண்ணியிருந்தனர். உண்மையில் வழக்கும் அப்படிப்பட்டது தானே!—இப்படியிருக்கையில், மானேஜர் அந்த உத்தியோகஸ்தனுக்கு ஓர் அணா அபராதம் போட்டார். அதுகண்டு எல்லோரும், "என்ன விந்தையிது, இந்தத்திருடனுக்கு ஓரணா அபராதந்தானா விதிப்பது?" என்று பேசிக்கொண்டு ஆச்சரியப் பட்டார்கள். மானேஜர் அதைக் கேட்டதும், "ஏன் ஆச்சரியப் படுகிறீர்கள்? இவர் திருடியதற்குக் காரணமென்ன? பணமில்லாக் குறை வினாலே தானே? பணமில்லாத இந்தத் தரித்திரனுக்கு ஓரணா அபராதத்தைவிட அதிகமாய் விதிக்கலாமா?" என்று கேட்டார். அவர் இப்படிக் கூறியது கேட்டு எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். உத்தியோகஸ்தன் அவமானமென்னும் பெரியமடுவில் ஆழ்ந்தான். அவன் தலைதொங்கலிட்டு விட்டது. தலையில்லா முண்டம் போலானான். பிறகு ஒருமாதம் வரையில் அவன் வீட்டைவிட்டு வெளியேவராமல் நாணத்தினால் வருந்தினான்.

விளம்பரம்

'கோபம், பாபம், சண்டாளம்.'

(1) ஓர் ஊரில் ஒரு பிராமணன் இருந்தான். அவன் வேதாத்தியயனம் செய்தவன்; நியமநிஷ்டை தவறாதவன்; யோக்கியன். அநேகமாக மற்றவர்களுடைய பேச்சுக்குப் போகாமல், தன் வேலைகளைச் சரிவரச் செய்துகொண்டு செல்லும் இயல்பினன். இவ்வளவு நற்குணங்களையு முடையவனெனினும், அவனிடத்தில் மிகுதியும் முன்கோபம் குடிகொண்டிருந்தது. அது அவனுடைய பலவித நல்ல குணங்களையும் மறைத்து, பொல்லாக் குணங்களையே மிகுதியும் வெளியில் எடுத்துக் காட்டுவதாயிற்று.

(2) கோபமென்னும் கொடிய துர்க்குணம் ஒன்றே ஒருவனைப் பலவழிகளிலுங் கெடுக்கப் போதுமானதன்றோ? இதைக்காட்டிலும் தீமையைப் புரியத்தக்க வேறு விரோதி இவ்வுலகத்தில் யாருமில்லை யல்லவா? இதனாலன்றோ,

"கோபமே பிறவியைக் கொடுக்கும் கொள்கையாம்
கோபமே யறிவினைக் குறைக்குங் குட்டநோய்
கோபமே தாயையுங் கொல்லுந் திண்படை
கோபமே தவத்தினைக் குலைக்கும் பேயரோ!"

என ஆன்றோரும் கூறிப்போயினர். நிற்க,

(3) ஒருநாள் இந்தப்பிராமணன் ஊர்ப்புறத்திலுள்ள ஒரு நதியில் ஸ்நானம் செய்து, விபூதியைத் தேகமெங்கும் அணிந்து கொண்டு, கரையிலுட்கார்ந்து,

காயத்திரி, ஜபம் செய்துகொண்டிருந்தான். அப்பொழுது, கொஞ்சதூரத்திற் கப்பால் ஒருவண்ணான் தன் துணிகளை மெல்லெனத் துவைத்துக் கொண்டிருந்தான். இவ்விதமிருக்கையில், வண்ணான் துவைத்தலினால் வெளிப்பட்ட நீர்த்துளி ஒன்று, ஜபம் செய்துகொண்டிருந்த பிராமணன்மீது தெறித்தது. உடனே பிராமணனுக்குப் பிரமாதமான கோபம் வந்துவிட்டது. அவன் தலைகால் தெரியாமல், சத்தமிட்டுக் குதித்துக்கொண் டெழுந்திருந்து, "நாயே! பேயே! புத்தியில்லையா உனக்கு? ஏன் என்மீது ஜலத்தைத் தெளிக்கிறாய்? என்னுடைய ஜபத்தைக் கெடுத்தாயே! மடமூண்டமே! உனக்கு இத்துணை அகம்பாவமா? உன்னை என்ன செய்கின்றேன் பார்" என்று சொல்லி, அவனிருக்குமிடத்திற்கு ஓடிச்சென்று அவனைப் பளீர்! பளீர் என்று ஐந்தாறு அறை அறைந்து, வாய்கொண்டமட்டும் வைதுதீர்த்தபின், தான் போய் மறுபடியும் நதியிலிறங்கி ஸ்நானம் செய்யத் தொடங்கினான்.

வெகுண்டார்முன் யாவும் தோன்றாக்கெடுமன்றோ? அதனாலன்றோ 'முன் கோபக் காரரோ டிணங்க வேண்டாம்' என்ற போதனை பிறந்திருக்கிறது.

(4) வாய்த்திறவாமல், பிராமணன் வைதவைகளையும் அடித்த அடிகளையும் பொறுமையுடன் சகித்துக் கொண்டிருந்த வண்ணான், தானும் துவைப்பதை நிறுத்திவிட்டு, ஆற்றிலிறங்கி ஸ்நானம் செய்வதாயினான். அது கண்ட பிராமணன், "அடே! கொழுப்பெடுத்த வண்ணானே! கழுதைத் தடியா! நான் தான் உன்னைத் தொட்டதன் பொருட்டு ஸ்நானம் செய்கிறேன். நீயும்

எனடா ஸ்நானம் செய்கின்றனை ?" என்று கேட்டான். அதற்கு அவ்வண்ணான், அடக்கத்துடன், சாந்தமாக, மெல்லிய குரலில், "ஐயா ! பிராமணோத்தமரே ! கோபம் யாருக்கிருக்கின்றதோ அவர்கள் சண்டாளர்களுக்குச் சமதையானவர்கள் என்று பெரியோர் சொல்லக் கேட்டிருக்கின்றேன். கோபம் பாபம், சண்டாளம் என்பதை நீர் அறியீரோ ? ஆகவே, நீர் என்னைத் தீண்டியதன் பொருட்டு நான் அவசியம் ஸ்நானம் செய்தே தீரவேண்டியது நியாயமல்லவா ?" என்று பதிற்சொன்னான்.

(5) இம்மொழிகளைக் கேட்ட பிராமணன்வெட்கித் தலைகுனிந்து, 'ஐயோ ! அநியாயமாய்ப் பிராமணனாகப் பிறந்தும் சண்டாளனானேனே ! இந்தக் கோபம் என்னை அடியோடு கெடுத்துவிட்டதே! என் வீண் ஆர்ப்பாட்டங்களினால் என்ன பலன்? இவ்வண்ணானுக்கிருக்கும் அடக்கமும், சாந்தமும், உத்தம சாதியிற் பிறந்த எனக்கில்லாமற் போயிற்றே ! என் ஜன்மத்தைச் சுடவேண்டும்", என்று தன்னைத் தானே நிந்தித்து, பின் தெளிவடைந்து, வண்ணானிடம், 'நீ இன்று எனக்குப் போதித்த இந்த அரிய போதனையை நான் என்றும் மறவேன். நீ துணிகளின் அழுக்கைப் போக்குவது போலே என் மனத்தின் அழுக்கையும் போக்கினவனானாய்! இவ்விஷயத்தில் எனக்கு நீ குருவாக விளங்குகிறாய்! உன்னால் இன்று நான் தன்யனானேன்" என்று பலவிதமான உபசார வார்த்தைகளைச் சொல்லி, அவனிடம் விடைபெற்றுச் சென்று தன் இருப்பிடம் சேர்ந்தான்.

(6) அன்று முதற்கொண்டு பிராமணன், 'ஆறுவது சினம்' என்பதை மனத்திற்கொண்டு, கோபத்தைத் தன்

னிடத்திலிருந்தும் அகல ஓட்டி, சாந்தத்தைத் தன் மனத்தே நிலையாக நாட்டி, யாவரிடமும் கருணைகாட்டி, ஈசனுடைய உபய பாதங்களில் தன் அன்பை என்றும் நீங்காத அணியாகப்பூட்டி, செம்மொழி பூண்டு, செல் லும் வழியறிந்து அடங்கிநடந்து, மேனிலை யடைந்தான்.

"உள்ளங்கவர்ந் தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க"
"உள்ளியவெல்லா முடனெய்து முள்ளத்தா
னுள்ளான் வெகுளி யெனின்!" சுபம் !!

S. R. கணபதி சுப்ரமண்ய அய்யர்,
தமிழ்ப் பண்டிதர்,
போர்டு ஹைஸ்கூல், கொள்ளேகாலம்.

பிரார்த்தனை.

(1) சென்றவோரு பசுவதனைக் கன்றெதிர் பார்த்திடல் [போல்
தினமுமெதிர் பார்த்திடுமேன் சிந்தை மகிழ்கோள்ளக்
குன்றெறிந்த வேள்முருகன் என்று வருமென்று
குறமகளிர் போல ஒரு குறி சோல்லு பல்லி.

(2) படரவோரு பற்றற்ற பசுங்கோடிபோ லுள்ளம்
பரதவிப்ப தொழிந்து நல்ல பதம்பெறுமாறந்தச்
சுடரிலைவே லையனெதிர் தோன்றிடுவதென்று
சுத்த நிலை நின்றுகுறி சோல்லுசிறு பல்லி.

(3) காளைகண்ட னைக்கண்ட பாலகனைப்போலக்
கண்ணபிரான் கருணை கண்ட பெண்ணரசிபோல
வேலவனைக் கண்டுமகிழ் காலமேது சோல்லு
வேண்டும் வரகவியன்பு விரும்பிச் சிறு பல்லி.

ஹாஸ்யம் 2.

அப்புவையன் என்றொரு பிராமணனிருந்தான். அவன் தன் மனைவிக்கு அடங்கிப் பயபக்தியாய் நடக்கும் மகாராஜன்; மனைவி, விரும்பிப் போஜனமிட்டபோது தான் சாப்பிடுவான். அவள் வெளியே போகலா மென்று உத்தரவு கொடுத்த பிற்பாடுதான் வெளியே போவான். அப்படிப்பட்ட சாது அப்புவையன். அவனுக்கு தொண்ணூற்றைந்து வயது நிறைந்த ஒரு தாயாரிருந் தாள். அந்த அம்மாளுக்குக் கண் தெரியாது, காது கேட் கும். அந்த அம்மாளை அப்புவையன் மனைவி கொடும் பாடு படுத்துவாள். அப்புவையன் மெச்சிக் கொள்ளும் படி அவள் தன் மாமிக்கு வஞ்சகமாகப் போலி உபசா ரஞ் செய்வாள். அவள் என்ன செய்தாலும் மாமிமனம் பொறுத்திருப்பாள். பொறுக்க முடியாத சில சமயம் தன் மகனிடம் இரகஸ்யமாய் "அப்பா உன் மனைவி இப்படிக் கொடுமை செய்கிறாள்; நீ நான் சொன்னதாகக் கண்டு கொள்ளாதே! கண்டுகொள்ளாமல் எப்படி நல் வழிக்குக் கொண்டுவரவேண்டுமோ அப்படி நல்வழிக்குக் கொண்டுவா. நான் சொல்லிக் கொடுத்ததாகத் தெரிந் தால், என்னைக் கஷ்டப்படுத்துவதோடிராமல் உன்னை யும் கஷ்டப்படுத்துவாள். அதனால் வீண் சண்டையும் விளையும்" என்று கூறுவாள்.

அப்புவையனும், "அம்மா, அப்படியே கவனிக்கி றேன்" என்று கூறி மனைவிக்குப் பலவிதத்தில் இதஞ்

சொல்லிவருவான். அப்புவையன் எப்படி இதவசனங் கூறினாலும் அவள் தன் போக்கிலேயே இருப்பாளேயன்றிச் சற்றும் கிழவியினிடம் இரக்கங் கொள்ளமாட்டாள். அப்புவையன், சிலசமயம் "அம்மாள் சாப்பிட்டாளா, விசாரித்தாயா ?" என்று கேட்பதுண்டு. கேட்டால், அவள், "நான் பத்துத் தடவை விசாரித்தாய்விட்டது. பசியில்லையாம்; வேண்டாம் என்கிறாள். வேண்டுமானால் உங்களெதிரில் கேட்கிறேன்" என்று கூறிப் பரபரப்பாக ஒரு மூலையிலே சயனித்துக் கொண்டிருக்கும் மாமியாரிடம்போய், வெகுமெதுவாய், "அம்மா கொஞ்சம் பால் வேண்டுமா" என்று கேட்பாள். அவளுக்குப் பால் பிடிக்காது. ஆகையினால் அவள், பலமாய் "வேண்டாமடியம்மா" என்று கூறுவாள். அப்புவையன் மனைவி உடனே தன் கணவனைப் பார்த்துக் "கேட்டுக் கொண்டீர்களா? நான் சொன்னால் உங்களுக்கு நிஜமென்று படுவதில்லை" என்று கூறுவாள். அவன் அவள் பேச்சை நம்புவான்.

இப்படி நடந்துகொண்டிருக்கையில், ஒருநாள், அப்புவையன் மனைவி அவள் மாமியைப் பெரும்பாடு படுத்திவிட்டாள். மாமி அதைத் தன் மகனிடம் வெகு இரக்கமாய்ச் சொல்லி, "என்னை எங்கேயாவது குளங்குட்டைகளிலே தள்ளிக் கொன்றுவிடு; உனக்குப் புண்யமுண்டு" என்றழுதாள். அப்புவையன் தன் தாயாருக்குத் தக்க சமாதானஞ் சொல்லித் தேற்றிவிட்டு, தன் மனைவியை யுக்தியினால் வெல்லவதெனத் தீர்மானித்தான்.

பின்பொரு நாள், காரீயத்தினால் நாணயம் செய்து ஒரு செம்பு நிறைய நிரப்பி வாயை மூடி முத்தரித்து அதைத் தன் தாயின் தலைமாட்டில் வைத்துவிட்டான். அவன் மனைவி அதைக் கண்டதும் கிழவிக்குத் தெரியா

மல் மெதுவாயெடுத்து வந்து கணவனிடம் காட்டி "இது என்ன?" என்று கேட்டாள். அப்புவையன், "இது ஒரு காரியந்தான்" என்றான். அவள், காரியம் என்றால் என்ன என்று கேட்டாள். அப்புவையன் "அம்மாள் நூறு ரூபா ஒரு பிராமணனுக்குக் கடன் கொடுத்திருந்தாள். அதைக் கேட்டு வாங்கச் சொன்னாள்; வாங்கி வந்தேன். அதை அப்படிப் பத்திரப் படுத்தித் தன்னிடம் வைக்கும்படி அம்மாள் சொன்னாள். அதனால் அப்படிச் செய்துவைத்திருக்கிறேன். அம்மாள் இன்னும் எத்தனையோ பேருக்கு இப்படிப் பணம் கொடுத்திருக்கிறாள். அவற்றையெல்லாம் கேட்டு வாங்கவேண்டும். அம்மாளுடைய பிராணன் போய்விட்டால் அவையெல்லாம் வருவது கஷ்டம். ஆகையினால் அம்மாளுக்கு வேளை தவறாமல் அன்னம் படைத்து அவளுக்கு வாய்க்கு வேண்டியதைக் கொடுத்துக் காப்பாற்று" என்றான்.

அவள் அதைக்கேட்டுச் சந்தோஷமடைந்து அந்தச் செம்பை மாமியின் தலைப்பக்கத்திலேயே கொண்டுபோய் வைத்துவிட்டாள்; பிறகுகிழவிக்கு வேளை தவறாமல் உண்விட்டு என்றுஞ்செய்யாத உபசாரங்கள் செய்துவரத் தலைப்பட்டாள். இப்படியிருக்கையில் ஒருநாள் கிழவிமாரடைப்பினால் இறந்துவிட்டாள். கிழவிக்குச் செய்யவேண்டிய அபரக்கிரியைகளை அப்புவையனும் அவன் மனைவியும் மனமொத்து வெகுநன்றாய்ச் செய்தார்கள். பிறகு ஒருநாள் அப்புவையன் மனைவி கிழவிவைத்திருந்த செம்பை எடுத்து முத்திரையைப் பெயர்த்து ஆசையோடு ஒருதட்டில் கொட்டிப் பார்த்தாள். அதிலிருந்த நாணயம் ஒருமாதிரியாயிருக்கக் கண்டு "இது என்ன இப்படி இருக்கிறதே, காரீயமா?" என்று நாயகனைக் கேட்டாள்.

அவன் நகைத்து, "நான் அப்பொழுதே சொல்லவில்லையா இது ஒருகாரீயம் என்று! இது காரீயந்தான்" என்றான். மனைவி "எனிப்படி?" என்றாள். அவன் "உன்னை வழிப்படுத்துங் காரியந்தானிது!" என்றுகூறி, "நீ என்

அன்னையைப் படுத்திவைத்த பாடுகளெல்லாம் நானறி வேன்! அதனாலேதான் உனக்கு இந்த ஆசைகாட்டி என் அன்னைக்குச் சாகிறகாலத்தில் சௌகரிய முண் டாக்கினேன். நீ இனி என்னை என்னசெய்யமுடியும்? ஏதா வது ஏறுமாறாக நடந்தால், ஸந்நியாஸங்கொண்டு உன் னைச் சோற்றுக்குத் திண்டாடவைப்பேன்" என்று மிரட்டி அனுப்பினான்.

பழமொழிகள்

1. அகலவிருந்தால் நிகள உறவு, கிட்டவிருந்தால் முட்டப்பகை.

உறவினர் ஒருவர்க்கொருவர் அதிகமாய் நெருங்கிப் பழகுவது அவ்வளவு சிறப்புடையதாகாது என்பது இதன் கருத்து.

2. பிள்ளை பிறக்கிறதற்கு முன்னே தின்னுபார். மருமகள் வருவதற்கு முன்னே கட்டிப்பார்.

பிள்ளைகள் பிறந்துவிட்டால் பிறகு எதையும் அவர் களுக்குக் கொடுக்கத் தோன்றுமே ஒழிய பெற்றவர்கட் குத் தாமுண்ண மனம்வராது. இது ஒருகருத்து. இதனை யன்றிப் பிள்ளை பிறந்தால் அதன் தேகசௌக்கியத்திற் கேற்றபடி தாய் உணவு உட்கொள்ளவேண்டியது அவ சிய மாகையினால் அக்காலத்தில் கண்டதை விரும்பி மனம்போனபடி உண்பது கூடாது. தின்றால், தாயின் பாலருந்தும் குழந்தை நோயினால் வருந்துமென்பதி லையமில்லை. இது மற்றொரு கருத்து.

மருமகள் வருவதற்கு முன்னே கட்டிப்பார் என் பது, மருமகள் வந்துவிட்டால் விலையுயர்ந்த வஸ் திர முடுத்துக்கொண்டு அழகு செய்துகொள்ள மாமிக்கு மனம் வருவதில்லை. ஆகையினால் உடுப்பதும் பூண் பதும் மருமகள் வருவதற்கு முன்பே செய்துகொள்ள வேண்டுமென்பதாம்.

ஸ்ரீமான் வி. ரங்கவடிவேல் முதலியார்
அவர்கள். பி. ஏ., பி. எல்.,

உலகத்திலே பலகோடிப் பிறவிகள் தோன்றுகின்றன. அவற்றுள் "அரிது அரிது மானிடராதலரிது" என்று பெரியார் கூறியுள்ளபடி மானிடப் பிறவி வாய்ப்பதரிதாம். ஆதலின் மானிடப் பிறவிவாய்ப்பது பெரும் புண்ய வயத்ததென்றாயிற்று. புண்யத்தின் பயனாக வாய்த்திடும் அந்தப் பிறவியில், ஒரு விசேஷங் கூறுவதுண்டு. மக்களாய்ப் பிறந்தால் புகழுக்கு ஏதுவாகிய குணங்களோடு பிறக்கவேண்டும். அப்படிப்பட்ட குணமில்லாமல் உலகத்தில் பிறப்பதிலும் விலங்காகப் (மிருகமாக) பிறத்தலே நல்லது.

இதனை,

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று"

என்று தெய்வப் புலவராகிய திருவள்ளுவர் கட்டளையிட்டிருப்பதனை லறியலாம். ஆகவே இதனால், புகழுக்குரிய குணங்களில்லாதவன் விலங்கினும் கேடானவனாகிறான் என்று தெரிந்துகொண்டோம். எப்படி?—

புகழுக்கு ஏதுவாகிய குணமில்லாதவனை உலகம் அருளில்லாதவன் என்று கூறுகிறது; அன்பில்லாதவன் என்கிறது; தாட்சண்யமில்லாதவன் என்கிறது. ஆனால் இப்படி மிருகங்களை இகழ்வதில்லை. ஆதலின் புகழுக்கு ஏதுவாகிய குணமில்லாதவன் மனிதனாய்ப் பிறத்தலினும் மிருகமாய்ப் பிறத்தலே நல்லதென்று சொல்லியதாம்.

மானிடப் பிறவியின் இந்த இலக்ஷணம் அமையப் புண்யஞ் செய்தவர் ஸ்ரீமான் ரங்கவடிவேல் முதலியார். இவர் 1876 வது வருஷம் ஜூன் மாதம் 10-ந்தேதி

பிறந்தார். இந்த உத்தமகுண சிலரை மைந்தரா யடையும் புண்ணியஞ் செய்திருந்தவர் காஞ்சீபுரம் கிருஷ்ணசாமி முதலியார் என்பவர். இவர் காஞ்சீபுர வேளாள வகுப்பைச் சேர்ந்தவர்; சைவர். ஆனால் சைவம் வைஷ்ணவம் என்கிற பேதம் பாராட்டாதவர். அதனாலேயே இவர் தமது அருந்தவப் புதல்வருக்கு ரங்கவடிவேல் முதலியார் என்று திருப்பெயரிட்டனர் என்று தெரிகிறது. அன்றியும், இவர் மதராஸ் ரயில்வே கம்பெனியில் இன்ஜினீயர் இலாகாவில் பெரிய உத்தியோகத்தி லிருந்தபோது, கோயம்புத்தூர்க்கு அருகேயுள்ள காரமடை யென்கிற ஊரிலிருக்கும் ஸ்ரீரங்கநாதர் கோயிலில் திருப்பணி செய்திருக்கிறார். இதனை யல்லாமல் அந்த ஸ்தலத்திலே இரதோற்சவம் நடக்கும்போது இவர்களுடைய உபயம் ஒன்று நடந்துவருவதாகவும் தெரிகிறது. ஆகையினால் முதலியாரவர்களின் தந்தை சைவவைஷ்ணவ பேதமில்லாத சிறந்த தெய்வ பக்தரென அறியலாகும்; தாயாராகிய மாது ஸ்ரீ சௌபாக்கியம்மாள் அவர்களும் கணவன் முதல் பந்துக்களீறாகவுள்ள இனத்தவர்க்கும் பிறர்க்கும் நடந்துகொள்ளவேண்டிய முறைப்பாட்டின்படி நடந்து எல்லோராலும் நன்கு மதிக்கத்தகுந்த பாக்கிய சீலர்.

" தந்தை மகற் காற்று முதவி யவையத்து
முந்தி யிருப்பச் செயல் "—என்று

தமிழ் வேதம் கூறுகிறது அந்த வேதவாக்கைக் கடைப்பிடித்து, கிருஷ்ணசாமி முதலியார் தமது மைந்தர் ரங்கவடிவேல் முதலியாரைத் தக்க பருவத்தில் கல்வி பயில வைத்து அவ்விஷயத்தில் சிரத்தை பாராட்டி அவரை முன்னுக்குக் கொண்டுவந்தார். இது இவருடைய தாயாருக்கு "ஈன்றபொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச் சான்றோனெனக் கேட்ட தாய்" என்கிறபடி பேரானந்தத்தை யுண்டாக்கிற்று.

ஸ்ரீமான் ரங்கவடிவேல் முதலியார், நாடக மேடைகளெல்லாம் சந்தோஷமடைய அழகினும், ஆகிருதியி

லும், குணத்திலும், படிப்பிலும் தேர்ச்சிபெற்றார். இவர் முதலில் சென்னைச் சிந்தாதிரிப்பேட்டையிலேயே ஒரு பள்ளிக்கூடத்தில் கல்வி பயின்றார். அப்பால் பச்சையப்பன் கலாசாலையில் சேர்ந்தார்; அதன்பின் கிறிஸ்தவக் கலாசாலையிலே சேர்ந்து படித்து பி. ஏ. பரீக்ஷையிலே தேறினார்; அப்பால் லாகாலேஜில் சேர்ந்து படித்து 1908-வது வருஷம் பி. எல். பரீக்ஷையில் தேறினார். இவர் இரண்டாவது பாஷையாக எடுத்துக்கொண்டு படித்தது ஸம்ஸ்கிருதமென்று சொல்லக் கேள்வியுண்டு.

பின்னர், முதலியார் ஹைகோர்ட் வக்கீல் பிர்ஹ்மஸ்ரீ ஸ்ரீநிவாஸ ஐயங்கார் அவர்களிடமிருந்து வக்கீல் தொழிலில் பழக்கம் பெற்றார். அதற்கப்பால் ஹைகோர்ட் வக்கீல் ராவ்ஸாஹிப் ஸ்ரீமான் பி. சம்பந்த முதலியாரவர்களின் கீழ் வக்கீலாயிருந்து தமது தொழிலை மிகக் கௌரவமாகவும் புத்திசாலித்தனமாகவும் நடத்திவந்தார்.

1894-ம் வருஷத்தில் முதலியார் சென்னை, ஸுகுணவிலாஸஸபையில் ஓர் அங்கத்தினராய்ச் சேர்ந்தார்; அதில் நாடக வகுப்பில் ஒரு பாத்திரமாயிருந்து, நல்ல பேர் பெற்றார். இதுதான் இவரை நாமும் இவ்வுலகமும் புகழ்ந்து பேசுவதற்கு ஆதாரமாயிற்று. இதுதான் இவர்க்குப் புகழுடம்பைத் தந்தது. இவருடைய புகழ் தமிழ் நாடேயன்றி, ரங்கூன் பினங்கு, சிங்கப்பூர் நேடால் இலங்கை முதலிய இடங்களிலும் பரவியுள்ளது. இவரிருந்த நாடகஸபை இலங்கையிலேபோய்ப் பலமுறை விளையாடியிருக்கிறது. அச்சமயங்களில் முதலியார் அந்நகரவாசிகளுடைய அன்புக்கும் ஆசீர்வாதத்திற்கும் பாத்திரமாயிருந்து பிரமுகர்களிடம் தக்க ஸன்மானமும் பெற்றிருக்கிறார். பெரியோர்களுடைய ஆசீர்வாதத்திற்குப் பாத்திரமாவதும் பலபேருடைய மனமகிழ்ச்சிக்குக் காரணமாவதும் பெரும்புண்ணியவயத்தில் அமையத்தக்கனவேயன்றி எளிதில் அமைவனவன்று. முதலியார் சுமார் முப்பது வருஷகாலம் நாடக பாத்திரமாக இருந்திருக்கிறார். இந்த

முப்பது வருஷகாலங்களுள் ஏதோ ஒன்று இரண்டு தவிர மற்ற நாடகங்களி லெல்லாம் கதாநாயகியாகவே நடித்து ஸபைக்குப் பெருங் கௌரவந் தந்திருக்கிறார். இவர் எப்படி ராவ்பஹதூர் பி. ஸம்பந்த முதலியாரை அடுத்து வக்கீல் தொழில்புரிந்து வந்தாரோ அவ்வாறே நாடகத்திலும், நாடகநாயகனென விளங்கும் அவரையே அடுத்து விளையாடிவந்தார். இது ஒரு அதிசயமான அமைப்பு! இதனையன்றி இவ்விருவரும் ஸபைக்கு நாள் தவறாமல் வந்து தங்களுக்கு ஸபையில் ஏற்பட்ட தொழிலை முறைப்படி கவனிக்கும் நேர்மையைப் பலரும் புகழ்வார்கள். ஸபையில் நடத்திய தமிழ் நாடகங்களில் ஏதோ சிலவற்றைத் தவிர மற்றநாடகங்களி லெல்லாம், இவ்விருவரே நாயக நாயகிகளாக இருந்து நாடகத்தைச் சிறப்பித்திருக்கின்றனர். "இன்றைய தினம், ரங்கவடிவேலும் சம்பந்தமும், நாடகத்தில் தோன்றுவார்களா?" என்று கேட்டுக்கொண்டு பிறகு ஜனங்கள் நாடகத்தைப் பார்க்கப் புறப்படுவார்கள். இதனை நாம் ஒருமுறை திருநெல்வேலிக்கு ஸபை சென்றிருந்தபோது கவனித்தோம்.

கதாநாயகியாகவோ நாயகனாகவோ வருகிறவர்கள் ரஸிகராகவும், நல்லரூபமுடையவராகவும், கௌரவமுள்ளவராகவும், கானவித்யாபாரங்கதராகவும், வாக்மிகளாகவும் தைரியம் இன்சொல் முதலியகுணங்கள் நிரம்பியவராகவும் இருக்கவேண்டுமென நாடக இலக்கணம் கூறுகிறது. கதாநாயகியாக வருகிறவர்களுக்கு முக்கியமான இந்த இலக்ஷணங்களோடு பரதநாட்டிய முறையுந் தெரிந்திருக்கவேண்டுமென்று பெரியார் கூறுவர். முதலியாரவர்களிடம் இவற்றில் பெரும்பான்மையும் அமைந்திருந்தன.

நாடகசாலையானது ஜனங்களுக்கு நன்மை தீமைகளை அறிவுறுத்தும் ஒரு வித்யாசாலைபோ லிருக்கவேண்டு

மென்று பெரியார் கூறுவர். ஸுகுணவிலாஸ ஸபைக்கு இந்த இலக்ஷணம் அமைவதற்குக் காரணபூதரா யிருந்தவர்களில் இவரையும் ஒருவராகச் சொல்லலாம். நாயகநாயகிகள் ஸிங்காரரஸப் பிரதானமான நாடகம் விளையாடுங் காலத்தில் தாங்கள்ஒருவர்மேல் ஒருவர்கொண்ட காதலைப் பிரகாசமாய், எனக்கு உன்மேலாசை, காதல் என்று வெள்ளையாய்க் கூறுவது கூடாதென்றும் அப்படிப் பேசுவது இயற்கைக்கு விரோதமென்றும் அது சப்தத்தினாலே காட்டிக்கொள்ளக் கூடிய விஷய மல்லவென்றும் எப்போதும் திருஷ்டிகோசரத்தி லுண்டாகும் பாவங்களினால் ஏற்படக் கூடிய விஷயமென்றும் ரூபத்தினாலோ, கானத்தினாலோ வித்பத்தியினாலோ ஸ்தானத்தினாலோ நடையுடை பாவனைகளினாலோ தானே உண்டாய் விருத்தியடைந்து அழியக் கூடியதென்றும் நாடக இலக்ஷண முணர்ந்த பெரியார் கூறுவர். இந்த இலக்ஷணம் இவர்பாற்கண்டு மகிழ்ந்த நாடகாபிமானிகள் பலருண்டு.

நாடகத்தை வசனரூபமாக நடத்துவதே முற்கால வழக்கமாகத் தெரிகிறது. ஏதோ சில சில இடங்களில் பாடல்கள் சேர்த்து நடத்துவதுண்டு. ஆனால் இப்போது கதாசந்தர்ப்பத்தை விடாமல் பொருத்தஞ் செய்ய மாத்திரம் வசனமும் மற்றப்படி முழுவதும் சங்கீதமுமாகவே நடத்திவருவதைக் காண்கிறோம். இந்த முறையில் அநேகர், பாட்டைப் பாடித் தங்கள் சங்கீத சாமர்த்தியத்தை முழுவதும் நாடகமேடையில் காட்ட முன்வருகின்றனர். இதில் பின்பாட்டுக்காரர் வேறு ராக ஆலாபனஞ் செய்கின்றனர். இதனால் வீண் காலப்போக்கு ஏற்படுகிறது; நாடகாபிமானிகளின் கவனத்தை வேறு வழியிலே இது திருப்புகிறது; நாடகரஸத்தைக் கெடுக்கவும் செய்கின்றது. இவ்வாறு நாடகம் நடத்துவது முறையல்லவென்பது பற்றி, தென் இந்தியாவில் பேர்போன நாடக பாத்திரராகவிளங்கிய காலஞ்சென்ற ஸி. கல்யாணராமய்யரவர்கள் பின்வருமாறு எழுதியுள்ளார்—

"நாடகமென்பது (Reproduction of Nature) ஈசுவர ஸ்ருஷ்டியில் சுபாவமாக ஏற்பட்ட பிராபஞ்சிக தருமங்கள் சுகதுக்கங்கள், சேர்க்கை பிரிவுகள் முதலியவற்றை அவை போலவே நடித்துக் காட்டுவதுதான். ஜனங்களின் உலக நடை முழுவதும் வசனரூபமாக விளங்குகிறதே யல்லாமல் சங்கீதத்தினாலல்ல. சிங்காராதி நவரஸங்களும் விவகாரதெசையில் வருகையில் ஒன்றையொன்று சார்பாகக் கலக்கும்போது அநேக பேதங்களை அடைகின்றன; அநந்த ரஸங்களாகின்றன. இந்த ரஸஸ்தாயீ பாவங்களைத் தனித்தனியே உண்மையாய் நிரூபணஞ்செய்ய உலகநடையாயுள்ள வசனத்தினால்தான் கூடும். ஒரு ஜீவனின் ஒரு நிமிஷங்கூட ஒரே நிலையிலிருப்பது ஸாத்தியமில்லையென்பது திண்ணம். அநேக விதமான பிரவிர்த்தி, நிவர்த்தி, சுகம், துக்கம், விருப்பு, வெறுப்பு இவற்றைப் பிரதி க்ஷணங்களிலும் தாமதியாமல் மாறி மாறி வெளிப்படுத்தவேண்டிய ஒரு நாடகபாத்திரம் சுருதிக்கும் தாளத்திற்கும் பின் உதவிப்பாட்டிற்கும் காத்திருந்தால் எப்படி ஸபையிலுள்ள ரஸிகர்களுக்குத் திருப்தியாகும்? நாடக பாத்திரங்களின் மனநிலையும் சபையோர்களின் மனநிலையும் அபேதமாய் ஒன்றாகிக் கலந்து சிரித்தாற் சிரிக்கவும் அழுதால் அழவும் வெறுத்தால் வெறுக்கவும் ஏற்படும்போதல்லவோ நிஜாநுபவ நிரூபணை மேற்படும்? நாடகமத்தியில் காரணமில்லாமல் ஒரு நிமிஷம் தாமதித்தாலும் சபையோர்களின் மனப்பற்று மாறிவிடும். சுருதியை விட்டாலும் தாளத்தை விட்டாலும் அதிசங்கதி போட்டாலும் சபையோர்களின் மனப்பிடிப்பு நழுவுமென்பது நிச்சயம். பின்பாட்டு ஒற்றுமையில்லாமற் போனாலும் மறுபடி சபையோர் மனதைக் கவர்ச்சிசெய்வது அதாவது பூர்வ அநுபவ நிலைக்குக் கொண்டுவருவது சாத்தியமல்ல."

குறிப்பு:—நாடக பாத்திரங்கள் இத்தகைய நாடக இலக்ஷணங்களை உணரவேண்டுமென்றே இதனை ஈண்டெடுத்துக் காட்டினோம்.

ஸ்ரீமான் ரங்கவடிவேல் முதலியாரவர்கள் அப்படிப் பட்ட குற்றத்திற்கு இடந்தராமல் வெகு ஒழுங்காய் நடித்துவந்தனரென்று பெருமைப்படுத்திப் பேசுவது மிகையாகாது. முதலியார் அவர்களுக்கு வயது நாற் பத்தெட்டானாலும் அவர் பார்வைக்கு முப்பது வயதின ராகக் காணப்படுவர். அத்தகைய தேக அமைப்புடை யவர் அவர். அவருடைய தலைமயிரில் ஒன்றுகூட நரைத்தி ராது. அவருடைய முகம் சாதாரணமாகவே எவரையும் வசீகரிக்கும். நாடகமேடையிலே நடிக்கும் காலத்தில் இவரைப் பற்றி முன்னரே அறியாதார் இவரை யாரோ பெண்பாலென்றே கருதுவர். பல சொல்வானேன்; "இந்தச் சுந்தர ரூபன் இந்த ஸ-்குண விலாஸ ஸபை நாடகமேடை நாயகியாக விளங்கவே பிறந்தவன்" என்று எவரும் புகழ்வர்.

முதலியார் முகத்தில் பெண்கட்குரிய பேதைமை தவழும். இவர் எப்பொழுதும் மந்தஹாஸவதன சுந்தர ராய் விளங்குவர். இவர்க்கு வீண்பெருமை என்பதே தெரியாது. இவர் தம்மைப் பிறர் வாழ்த்தக் கேட்பின் தாழ்த்திக்கொள்வர். தெய்வத்திற்கும் பெரியோர்க்கும் அஞ்சி நடக்கும் சுபாவமுடையவர் இவர். இவர் நாடக மேடைக்குச் செல்லுமுன் தமது தெய்வந்தொழுது செல்வர்; செல்கையில் பெரியாரைக்காணின் வணங்கி மிக மரியாதையுடன் ஆசீர்வாதம் பெறுவர். இவர் ஒரு ஸமயம் ஸீதையாக நடிக்க நேர்ந்தது. அன்று இவர் சுத்த உபவாஸமிருந்து நாடகமுடிந்த பின்பே உணவு அருந்தியதுண்டு. இம்மாதிரியே இவர் வள்ளிநாயகியாக நடித்த சமயமும் செய்தனர். இவர், தம்முன் பேசு

வோர் மிகச் சிறியரே யானாலும் பெரியரேயானாலும் அவர் பேசுவதை மிகப் பொறுமையாய்க் கேட்டுப் பின் தாம் ஏதாவது பேசவேண்டியதா யிருப்பின் மெது வாய்ப் பேசுவர்; இன்றேல் பணிந்து விடைகொள்வர்.

முதலியாரவர்கள் என்றும் எந்தவேளையிலும் பரி சுத்தமான உடை உடுத்துக்கொண்டு தம்மைவந்து காண் பவர் தம்மைவிட்டுப் பிரிய மனமில்லாதபடி வார்த்தை யாடுவார்.

"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்"—என்னும்

தமிழ் வேதவாக்கின் பெருமையை இங்கே கண்டு அறி ஞர் மகிழ்வர்.

1916-ம் வருஷம் ஸுகுண விலாஸ ஸபை வெள்ளி ஜூபிலி நடந்தது. அச்சமயம் சென்னை, ஜயவிலாஸ ஸபை அதற்கு ஒரு வாழ்த்துமஞ்சரி பாடி அனுப்பியது. அதில், சபைச் சிறப்பு என்ற தலைப்பில்,

வெண்பா

"சத்திசம் பந்தத் தனிரங்கஞ் சார்ந்ததமிழ்
நத்திசம் பந்தக்ருஷ்ண னற்கானம்—ஒத்த
ஸுகுண விலாஸஸபை தொல்லுலகில் வாழ்க
தகுந ருடன்சந்த தம்"

என்று ஒரு வாழ்த்துக் கவி இருந்திருக்கிறது. இதில் ஸ்ரீமான் ரங்கவடிவேல் முதலியார், ஸ்ரீமான் சம் பந்த முதலியார், பிர்மஹஸ்ரீ கிருஷ்ண ஸாமி ஐயர் மூவ ரையும் புகழ்ந்து பேசியிருக்கிறது.

முதலியாரவர்கள் ஸுகுண விலாஸ ஸபையில் நாடகபாத்திரமாக இருந்து அதனை விளங்கச்செய்தது மல்லாமல் பொக்கிஷதாரராகவும், ஸ்டேஜ்டைரக்டராக வும், காரிய தரிசியாகவும்இருந்து ஸபையை முன்னுக்குக் கொண்டுவந்திருக்கிறார். இவர்தமது கடைசிகாலத்தில் ஸபையின் உதவி அக்ராசனாதிபதிபதவியை வகிக்க நேர்ந்து அதிலும் சிறந்தபெயர்பெற்றார். இன்னும் இவர் சென்னை ஜயவிலாஸஸபையிலும் அது தோன்றியது

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
186463

முதல் உதவி அக்ராஸனாதிபதியாயிருந்து அவ்வப்போது அவர்களுக்கு வேண்டிய உதவிகளைப் புரிந்து வந்தார்: நாடகத்திலே இவர் கொண்டிருந்த அபிமானமும் அதில் தாமின்னும் தேர்ச்சியடையவேண்டுமென்று உழைத்து வந்த நேர்மையும் இவருடன் கூடவிருந்து பழகியவர்களனைவரும் நன்குணர்வர்.

இவையன்றி முதலியாரவர்கள் (Hindu Good Templars League) மதுவிலக்குச் சங்கத்தில் அங்கத்தினராய்ச்சேர்ந்து கடைசிக்காலம் வரையில் அதில்தமது கடமையைச் சரிவரச் செய்துவந்தார். 1908-ம் வருஷத்தில் அதற்கு அக்ராசனாதிபதியாயிருந்து காரிய நிர்வாகம் செய்திருக்கிறார். கர்வம், வீண்பெருமை, படாடோபம் முதலியன இல்லாமல் தமது அந்தஸ்துக் கேற்றபடி நடந்துகொண்டமையினால் முதலியாரவர்களிடம் அச்சங்கத்தினர் யாவரும் அன்புபாராட்டி வந்தார்கள்.

இத்தகைய பெருந்தகைபாளர், தமது குடும்பமும், கணக்கிறந்த தமது நண்பர்களும் நாடகமேடைகளும் ஏங்கி மனம் நைந்து துக்கமுற, 1923-வது வருஷம் ஜூன்மாதம் 5-ந்தேதி இம்மண்ணுலக வாழ்வை விட்டுச் சகலலோக சரண்யனுடைய திருவடி நிழலை அடைந்தனர். இவரையே இவர்தம் நிழல்போலடுத்திருந்து இவரைத் தெய்வமெனப்பாவித்துத் தக்க பணிவிடை புரிந்துவந்த இவருடைய மனைவியாரும் இவருடைய ஏகபுத்திரியும் இவருடைய இரண்டு சகோதரர்களும் இவருடைய பிரிவாற்றாமையை எவ்வாறு பொறுத்திருக்கிறார்களோ அதனை யாரே யறிவர்? ஆ! ஜகதீசா! நீயே அவர்கட்கு ஆறுதலளித்து ஆதரிப்பாயாக!

இவருடைய பிரிவினால் சென்னை ஸுகுணவிலாஸ ஸபை வெகு நஷ்டமடைந்ததென்று கூறுவது மிகையாகாது. அந்தோ! என்னென்றியம்புவது! இவரோடிருந்து நாயகனாக நடித்துவந்த ராவ்ஸாகிப், ஸம்பந்த முதலியார் அவர்கள் கண்ணும் கண்ணீருமாக உயிரிழந்த உடல்போல் தவிப்பதை நாம் கண்ணாலே கண்டோமாத

வின் இத்துக்கம் அவர்க்கு இந்தப் பிறவியிலே மாறு மென்று கூறுவதற்கில்லையானாலும், அவரும் அவரைப் போல் ரங்கவடிவேல் முதலியார் அவர்களிடம் அன்பு பூண்டார் அனைவரும், தோன்றுவதும் மறைவதும் மானிடவாழ்விற்கு இயற்கையென்பதை எண்ணித் துக்கத்தை மறந்து தமது பூஜாகாலங்களில்—

இறைவனே! பரம கருணாநிதியே! உலகம் புகழ உடம்பெடுத்த உத்தமகுண சீலராகிய எமது நண்பரை உன்னுடைய திருவடி நீழலில்வைத்து அவர்க்கு நித்தியானந்த வாழ்வை யளித்திடுவாயாக!—என்று பிரார்த்தனை செய்வதே தமது நண்பர்க்குச் செய்யும் கைம்மாறெனக் கருதி நடப்பார்களாக!

பத்திராசிரியர்

மக்கட் பிறவியினாலே பெறத்தக்கவை.

தாரணியின் மநுவாய் முளைத்துளோர் பெற்றதாய்
 தந்தைசொல் கேட்டாரியன்
தருகல்வி கசடறக் கற்றவைக் கேற்றபடி
 தாநின்று லோகவியலின்
காரணமறிந்து தொல்குடிமை வழுவாமணங்
 கண்டுதாளாண் மைமேவிக்
கருதுநல் வழியினிற் பொருளீட்டி யுறவரைக்
 காத்துமெய்ந் நூலுணர்ந்து
வேரண விளங்குபதி பசுபாச மூன்றன்
 விதந்தெரிந்தாய்ந் திருவகை
வினையொப்பு மலபாக சத்திபாதம் பெற்று
 மிக்கதனையோர்தல் வேண்டும்
பூரணிபவானிசிவ சத்தியம் பிகையுயர்
 பொருப்பரையன் மகள் தநயனே
புனவள்ளி தெய்வயானைக்கு மணவாளனே
 போரிவடிவேன் முருகனே.

பணத்தாசையின் பயன்

மேல் நாட்டில் பெரும்பொருள் படைத்த சீமான் ஒருவனிருந்தான். அவன் பரமலோபி. ஆகையினால் அவன் தரித்திரனைப் போல் நடித்து வந்தான். அவன் உடுத்துக் கொள்ளும் உடையிலிருக்கும் தையலை எண்ணமுடியாதென்று சொல்வதுண்டு. அவன் உண்ணும் உணவும் பரம ஏழையும் வெறுக்கத்தக்கபடியாகத்தானிருக்கும். ஊரில் எங்கேயாவது தருமம் தானம் என்கிற பிரஸ்தாபம் நடந்தாலும் அவன் அங்கே இருக்க மாட்டான். ஒரு சிறு தொகைவரும்படி வருவதாயிருந்தாலும் அதற்கு மூன்றுநாளல்ல உண்ணாமற்கூடக் காத்திருப்பான். அவனை ஒருவரும் மதிப்பதில்லை.

இப்படியிவன் பொருள் சேர்த்திருப்பது எப்படியோ அரசாங்கத்தாருக்குத் தெரிந்துவிட்டது. அச்சமயம் அரசாங்கப் பொக்கிஷத்திலும் பொருள் குறைவாயிருந்தது. ஆனால் தேவை அதிகமாயிருந்தது. அரசாங்கத்திற்குப் பொருள் தேவையாயிருந்தால் பொருள் படைத்த குடிகளிடமிருந்து கட்டாயப்படுத்திப் பொருள் வாங்கலாம் என்னும் சட்டம் அக்காலத்திலிருந்தது. ஆகையினால் அந்தச் சட்டப்படி அரசாங்கத்தார் ஒரு திகதி குறிப்பிட்டு இதற்குள் இத்தனையாயிரம் ரூபா செலுத்தவேண்டுமென்று லோபிச் சீமானுக்கு ஓர் உத்தரவிட்டார்கள்.

லோபிச்சீமான் என்ன செய்வான் இப்பொழுது? என்ன செய்வதென்று பெரிய ஏக்கத்திலாழ்ந்தான்; கடவுளை வேண்டிக்கொண்டான்; அரசாங்க உத்தியோகஸ்

தர்களுக்கு லஞ்சங்கொடுத்துத் தன்னை ஏழை யென்று சொல்லித் தப்புவிக்கும்படி வேண்டினன்; இன்னும் பல வழிகளிலும் முயற்சிசெய்தான். ஒன்றிலும் பயன் படவில்லை. கடைசியில் லோபி தன்னிடத்திலே இருக்கும் பணத்தை யெல்லாம் பூமிக்குள்ளே சேமித்துவைக்கத் தீர்மானித்து, ஒருவருக்குந் தெரியாமல் தன் வீட்டிலோர் மூலையிலே இராவுக்கு இராவாய் வேலைசெய்து ஒரு பெரிய நிலவறை ஏற்படுத்தினன். அந்த நிலவறைக்கு மேற்பக்கம் கதவும் அக்கதவு தானே மேற்பக்கத்தில் தாளிட்டுக் கொள்ளும்படிக்கும் வேலை செய்திருந்தது.

சீமான், அரசாங்கத்தார் பணஞ் செலுத்தும்படி தனக்கு உத்தரவு பிறப்பித்திருந்ததற்கு முதல்நாளே, தன்னிடமிருந்த பணத்தையெல்லாம் ஒரு பெட்டியிலே போட்டு அதை நிலவறைக்குள் பத்திரப்படுத்தித் தானும் அதற்குள்ளே போய் ஒளிந்துகொண்டான். உத்தரவிட்டபடி தங்களுக்குப் பணம் வந்து சேராமையினல் அரசாங்கத்தார் அந்த லோபிச் சீமானைப் பிடிக்கவந்தனர்; அவன் வீட்டிலில்லாமற் போகவே நெடுகலுந் தேடினர்; அவனை எங்கும் காணமையினல் அவன் வீட்டைச் சோதனைபோட்டனர். அந்த வீட்டில் தமக்குக் கிடைத்த சாமான்களையும் வேறு சில பொருள்களையும் அந்த வீட்டையும் ஏலம்போட்டு அரசாங்கத்தார் பறிமுதல் செய்துகொண்டனர். ஆயினும் அவர்கள் எதிர்பார்த்தபடி பொருள் கிடைக்கவில்லை. அதனல் அவர்கள் லோபி பொருளோடு எங்கேயோ வெளிநாட்டுக்கு ஓடி விட்டானென்று தீர்மானித்துவிட்டனர்.

இப்படியாகவே சில நாட்களுக்குப் பிறகு அந்த வீட்டை ஏலத்திலெடுத்தவன் அதை இடித்துப்போட்டுப் புதிதாகக் கட்டத்தொடங்கினன். அப்பொழுது வேலைக்காரர்கள் எல்லாவற்றையும் இடித்துக்கொண்டு வருகையில், ஓர் மூலையில் நிலவறைக் கதவு அவர்களுக்குத் தென்பட்டது. அதை அவர்கள் அதிக ஆச்சரி

யத்துடன் தங்கள் எஜமானனை வரவழைத்து வைத்துக்கொண்டு திறந்தார்கள்; திறந்ததும் அழகிய நிலவறையொன்றைக் கண்டார்கள். அதிலிறங்கிப் பார்க்கும்படி எஜமான் அவர்களுக்கு உத்தரவிட்டான். அவ்வாறே செய்யும்போது பெரிய இரும்புப்பெட்டி யொன்று அகப்பட்டது. அதை அவர்கள் பெரும் பிரயாசைப் பட்டு வெளியேற்றினார்கள். பின்னும் பார்க்கையில் அங்கொரு பிரேதமிருந்தது. அந்தப் பிரேதத்தை உற்றுப்பார்க்கையில் அது தன் வலதுகரத்தை வாயிலே கவ்விச் சதையைக் கடித்துக்கொண்டிருந்தது. ஆச்சரியப்பட்டு வேலைக்காரர்கள் தங்கள் எஜமானனை அதற்குள் வரவழைத்துக் காட்டினர். எஜமான் பார்த்து அவ்வீட்டுக்குடையவனாயிருந்த லோபிச் சிமான் என்று தெரிந்துகொண்டான். பிறகு பலர் அவ்விடம் வந்துபார்த்துப் பரிதாபப்பட்டனர்; அவன் எப்படி இறந்திருப்பானென்று பலவழியில் ஆலோசித்துப் பார்த்தனர்; கடைசியில்,—ஸர்காருக்குப் பணத்தை ஒளிக்கக்கருதி இந்நிலவறை ஏற்படுத்தியிருக்கவேண்டும்: பணத்தை யெல்லாம் பெட்டியிற்போட்டு இதிலிறக்கி அவன்தானும் இதிலிறங்கி யிருக்கவேண்டும். இதன்கதவு வெளிப்பக்கம தானே தாளிட்டுக் கொள்ளத் தக்கதா யிருக்கிற படியினாலே இது மூடப்பட்டதும் பூட்டிக் கொண்டிருக்கவேண்டும். பிறகு வெளிவரப் பலவழியில் இவன் முயற்சி செய்திருப்பான். முடியாமற் போகவே தன் சதையைத்தானே கடித்துத் தின்று இறந்திருக்க வேண்டும்'' என்று தீர்மானித்தனர்.

அந்தோ! பணத்தாசை செய்யும் கொடுமைகளைப் பார்த்தீர்களா! ஆதலின்,

— தனந்தேடி யுண்ணமற் புதைக்கவேண்டாம்
தருமத்தை யொருநாளும் மறக்கவேண்டாம்

என்று கூறியுள்ள மூதுரைகளைக் கவனியுங்கள். அவற்றின் கருத்தறிந்து நடவுங்கள்.

Tara Printing Works, Madras.

186463
600 008

ஸ்ரீ கௌரி பானம்ருதம்.

மகா நிபுணர்களான ஆங்கிலேய டாக்டர்களால் காப்பி, டீ, முதலியவைகளைப் பானஞ் செய்வது எண்ணிறந்த தீக்குணங்களை செய்கின்றனவென்று கண்டு பிடிக்கப்பட்டும் அப்பானங்களை அறவே ஒழிக்க வேண்டுமென்றும் புத்தக ரூபமாய் பிரசுரித்து வெளிப்படுத்தியிருக்கின்றதை எவரும் அறிவார்கள். காப்பியின் மணத்திற்கு சிறிதும் வேறுபாடின்றி ஒத்ததாயும் குணத்தில் சிறந்ததுமான நம்தேசத்து மூலிகைகளின் கிழங்குகள், வித்துக்கள், புஷ்பங்களால் தயாரிக்கப்பெற்றது. ஒருமுறை உபயோகித்தவர்கள் மேலும் உபயோகிக்க விரும்புவார்கள்.

இதின் அரிய குணங்கள்.

ரத்தசுத்தி, பித்த சாந்தி, உஷ்ண சாந்தி உண்டாக்கி மலச்சிக்கலை நீக்கி, பசிதீபனத்தைக்கொடுக்கும், ஞாபகசக்தி ஆரோக்கியம் இவைகளை விருத்திசெய்யும் கணைச் சூடு, மூலச் சூடு, பித்த எரிச்சல், வாந்தி, மயக்கம், மேக வெட்டை, நீரிழிவு இவைகள் நீங்கும். டின் ஒன்றுக்கு விலை அணா 8. டஜன் ஒன்றுக்கு விலை ரூ. 5-12. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

விலாசம் தெரிவிப் போர்க்கு முழுவிபர மடங்கிய ஔஷத ஜாப்தா: இலவசமாய் அனுப்பப்படும்.

விலாசம் :—

டாக்டர் வி. ஆர். சுந்தரம்.
ஆயுர்வேத வைத்திய மந்திரம்,
பைகிராப்ட்ஸ் ரோட், ராயப்பேட்டை, மதராஸ்.

850/81

புதிய தமிழ்ப் புத்தகங்கள்.

ஆஸ்திகமத உபாக்யானம்:—தெய்வமகிமை, பெற்றோர் பெருமை புத்திரர்களின் கடமை, குருவின் பெருமை மாணவர்களின் கடமை, பதிவிரதையின் மகிமை, மனைவியின் கடமை ஆகிய இவைகளை விளக்கிக் காட்டும 50 கதைகள் வெகு அழகாக எழுதப்பட்டிருக்கின்றன. ஆண் பெண் இருபாலரும் படிக்கத்தக்கது. சித்திரப்படங்களுடன் கூடியது
விலை அணா 0 10 0

ஸ்ரீ விஷ்ணுலீலை அநேக சித்திரப் படங்களுடன் கூடியது. விலை அணா 0 5 0

ஸ்ரீ ராமச்சந்திரன் நல்லபிள்ளை ௸ 0 3 0

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருடைய சரித்திரங்களும் உபதேசங்களும் விலை ரூபா 1 12 0

ஸ்ரீ விவேகாநந்த சுவாமிகளின் விரிவான சரித்திரம்
விலை ரூபா 2 0 0

ஸ்ரீ விவேகாநந்த விஜயம் விலை ரூபா 1 8 0

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் விலை ரூபா 1 4 0

புதிய தமிழ் நாவல்கள்

தபாற் கொள்ளைக்காரர்கள் (அந்தரக்களவு) ... 0 14 0

அபராவதி இரண்டு பாகமும் 4 0 0

இந்திராபாய் அல்லது இந்திரஜாலக்கள்ளன் 2 8 0

மஞ்சள் அறையின் மர்மம் 1 8 0

கனகபூஷணம்	3	8	0	ரத்னபுரிரகசியம்	4	0	0
பவளத்தீவு	1	8	0	சுந்தராம்பாள் அல்லது			
வீரகேசரி	1	12	0	மாய சந்நியாசி	1	0	0
மதனகல்யாணி	4	8	0	காளிங்கராயன்			
மங்கம்மாள்	1	8	0	கோட்டை	4	0	0
பத்மாக்ஷி	2	0	0	சௌந்தரகோகிலம்	1	8	0
கற்கோட்டை	2	0	0	லக்ஷ்மீகாந்தன்	2	0	0

விலாஸம்:—மானேஜர்—பாலவிநோதினி ஆபீஸ்,
இராயப்பேட்டை போஸ்டு, சென்னை